# திருப்பூர் மாநகராட்சி

**2020 ஏப்ரல் மாதம் 09-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1004 முதல்1008 வரை**

**30-04-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1009 முதல் 1016 வரை**

## திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1004)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பேரிடர் - கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு அவசர அவசியம் கருதி 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் பிரிவு 53(2)ல் பொது சுகாதாரத்தை நலன் கருதி உடனடி நடவடிக்கை தேவையினை சுகாதார அலுவலர் கருதினால் பிரிவு (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் எப்படி இருந்த போதிலும் அவர் தேவைப்படலாகும் கூடுதல் பணியாளர்கள் அமர்த்தவும், தேவைபடலாகும் மருந்துகள், கருவிகள், சாதனங்கள் மற்றும் வேறு பொருட்கள் வாங்கவும் செய்யலாம் மற்றும் அதனை பொறுத்து செய்ய நேர்ந்த செலவு உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து கொடுக்கப்படுதல் வேண்டும். அதன் அடிப்படையில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க 1981ம் வருடத்திய கோவை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் 18-03-2020-ந் தேதியில் ஏற்கனவே பெறப்பட்ட **தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தின்** விலைப்புள்ளி கிலோ ஒன்றுக்கு ரூ.53.10 வீதம் 30,000 கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்கி கொள்ள அனுமதியும் மற்றும் இதற்காகும் செலவீனம் ரூ.15,93,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்கு மேற்படி நிறுவனத்தின் 18-03-2020ந் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் கிருமிநாசினியாக பயன்படும் பிளிச்சிங் பவுடர் 30,000 கிலோ வாங்கி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 1873-2 / 2020)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

1005) திருப்பூர் மாநகராட்சி - COVID - 19 - தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள COVID - WISK - கொரோனா பரிசோதனை மாதிரிகளை சேகரிப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாவட்ட தலைமை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண்ணாடி அறை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண்.15ன் கீழ் நிர்வாக அனுமதி 16-04-2020 அன்று பெறப்பட்டு 16-04-2020 அன்று மாலை 3.30 மணி வரை விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வருமாறு உள்ளது.

**1005-ன் தொடர்ச்சி**

| வ. எண் | பணியின் விபரம் | Unit | AIM Interiors | Akshaya Plywoods | Sabari Interiors |
|---|---|---|---|---|---|
| A. | Supply and Fixing of LED free UPVC Profile 2.5mm Aluminium composite panel 18mm Laminated plywood vinyle sticker. | | | | |
| 1. | COVID WISK CABIN - 5 ft x 8 ft | 1 Sq.Ft. | 365.00 | 370.00 | 380.00 |
| 2. | Slidding Door With Lock – 5 ft x 8ft | 1 Sq.Ft. | 470.00 | 475.00 | 480.00 |
| 3. | Slidding Door With Lock – 4 ft x 8ft | 1 Sq.Ft. | 365.00 | 370.00 | 380.00 |
| 4. | Half Partition – 8 ft x 3 ½ ft | 1 Sq.Ft. | 365.00 | 370.00 | 380.00 |
| 5. | Glass Shelf – 1 x 1 – 2 Nos | 1 Sq.Ft. | 1045.00 | 1050.00 | 1100.00 |
| 6. | Platform – 5ft x 4 ft – 1 No. | 1 Sq.Ft. | 261.00 | 270.00 | 275.00 |
| 7. | Top Closing – 5 ft x 4 ft – 1 No | 1 Sq.Ft. | 261.00 | 270.00 | 275.00 |
| 8. | Sticker Work – 1 No. | 1 No. | 2612.00 | 2650.00 | 2655.00 |
| 9. | Electrical Materials – 1 No. | 1 No. | 1567.00 | 1600.00 | 1650.00 |
| 10. | Ceiling Fan – 1 No. | 1 No. | 1567.00 | 1600.00 | 1650.00 |
| 11. | Labour – 1 No. | 1 No. | 1045.00 | 1050.00 | 1100.00 |
| 12. | Glouse Set – 2 Nos | 1 No. | 261.00 | 270.00 | 275.00 |
| 13. | Exusted Fan | 1 No. | 1567.00 | 1600.00 | 1650.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். AIM Interiors அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும் மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்கியதையும் ஏற்கலாம்.
2. பதிவு செய்யலாம். (1209/E1/Z4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1006)** திருப்பூர் மாநகராட்சி - பல்லடம் பிரதான சாலைகளில் தற்காலிக காய்கறி கடைகள் அமைத்து விற்பனை செய்து வருகிறார்கள். கொரோனா வைரஸ் நோய் காரணமாக சமூக இடைவெளி கடைபிடிக்காமல் பொதுமக்கள் கூடி பொருட்கள் வாங்குவதால் அனைத்து கடைகளையும் பல்லடம் சாலை வார்டு எண்.45-ல் அமைந்துள்ள காட்டன் மார்க்கெட் வளாகத்தில் மாற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். காட்டன் மார்க்கெட் வளாகத்தில் அதிகாலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக பொது மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே புதியதாக தெருவிளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.25 இலட்சத்திற்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண். 15-ன் கீழ் நிர்வாக அனுமதி 06-04-2020 அன்று பெறப்பட்டு 06-04-2020 அன்று மாலை 3.30 மணி வரை விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வருமாறு உள்ளது.

**1006-ன் தொடர்ச்சி**

| வ. எண் | பணியின் விபரம் | Unit | Ramachandra Electrical & Engineering Stores | S.Mani Electricals | Golden Engineering Corporation |
|---|---|---|---|---|---|
| 1. | PVC INSULATED SINGLE CORE 36/0.3 (2.5sq.mm) MULTI STRAND FIRE RETARDANT FLEXIBLE COPPER CABLE | 1 RM | 22.00 | 25.00 | 20.00 |
| 2. | Supply of PVC INSULATED AND SHEATHED 3 CORE 2.5 sq.mm FLAT TYPE COPPER CABLE | 1 RM | 110.00 | 115.00 | 105.00 |
| 3. | Supply and fixing of 48W LED Street Light Fittings With Pipe Clamp Set | 1 No | 4900.00 | 5000.00 | 4840.00 |
| 4. | Supply and Delivery of 40mm dia G.I. Pipes with ISI specification | 1 RM | 270.00 | 275.00 | 260.00 |
| 5. | Provision for PVC Spacials and Gunmetals | | | | |
| | 40mm G.I. Bend | 1 No | 90.00 | 100.00 | 85.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். கோல்டன் இன்ஜினியரிங் கார்ப்பரேசன் அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்கியதையும் ஏற்கலாம்.
2. பதிவு செய்யலாம். ( 1209 / இ.1 / ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1007)** திருப்பூர் மாநகராட்சி - மண்டலம் எண்.4, வார்டு எண்.50-ல் தென்னம்பாளையம் சந்தைபேட்டை பகுதியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் தற்பொழுது கொரோனா வைரஸ் நோய் காரணமாக மூன்று நேரமும் உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் நீர்மூழ்கி மின்மோட்டார் அடிக்கடி பழுதடைந்து பலமுறை பழுதுபார்த்தும் மீண்டும் இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் பாய்லருக்கு தண்ணீர் ஏற்றவும் பொது மக்கள் கை கழுவவும், பாத்திரங்கள் கழுவவும் தண்ணீர் கைகளில் இறைத்து பணி செய்வதில் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் மின்மோட்டார் மின் இணைப்பு கேபிள்கள் மற்றும் மின்விளக்குகள் புதிதாக மாற்ற வேண்டியுள்ளது. மேற்படி பணிகளை செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண். 15-ன் கீழ் நிர்வாக அனுமதி 16-04-2020 அன்று பெறப்பட்டு 16-04-2020 அன்று மாலை 3.30 மணி வரை விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வருமாறு உள்ளது.

**1007-ன் தொடர்ச்சி**

| வ. எண் | பணியின் விபரம் | Unit | Ramachandra Electrical & Engineering Stores | S.Mani Electricals | Golden Engineering Corporation |
|---|---|---|---|---|---|
| 1. | Supply of 3.00 x 4.00 Sq.mm Flat Submersible Cable | 1 RM | 170.00 | 175.00 | 160.00 |
| 2. | Supply of 3.00 x 2.5 Sq.mm Flat Submersible Cable | 1 RM | 110.00 | 115.00 | 105.00 |
| 3. | Supply of 3 phase 1.5 HP Mono block Centrifugal Mono block Pump set | 1 No | 15500.00 | 15550.00 | 15250.00 |
| 4. | Supply of 1 Phase Panel Board Star Delta with two level guard | 1 No | 5500.00 | 5600.00 | 5450.00 |
| 5. | PVC Insulated Single Core 36/0.3 (2.5 Sq,mm ) Copper Cable | 1 RM | 22.00 | 25.00 | 20.00 |
| 6. | Supply and fixing of Single box type 4' 40 W flu fitting complete | 1 No | 670.00 | 680.00 | 660.00 |
| 7. | Supply and fixing of 5A / 15A 3 pin combined flush type wall socket | 1 No | 400.00 | 420.00 | 390.00 |
| 8. | Supply and fixing of TPN 25 Amps 4 Pole MCB and 16 Amps MCB 12 Nos. | 1 No | 15500.00 | 16000.00 | 15400.00 |
| 9. | Supply and delivery of the following size of UPVC pipes | 1 M | 100.00 | 110.00 | 97.00 |
| 10. | Provision for Water supply arrangements | | | | |
| | 20mm C.P.Waste Not Tap | 1 No | 450.00 | 500.00 | 440.00 |
| | 20mm G.I.. Coupling | 1 No | 22.00 | 25.00 | 20.00 |
| | 25mm Ball Valve | 1 No | 650.00 | 700.00 | 590.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். கோல்டன் இன்ஜினியரிங் கார்ப்பரேசன் அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும் மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்கியதையும் ஏற்கலாம்.
2. பதிவு செய்யலாம். ( இ.1 / 1209 / 20 / ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1008)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்ட ( ABD Area) பகுதியில் ரூ.39.74 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதான மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ள தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,TUFIDCO அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். TUFIDCO / AM ( M ) 9th HPPSC நாள் 01-03-2019 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சிப்பம் (2) திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்ட ( ABD Area) பகுதியில் வார்டு எண்.42, 45, 50 மற்றும் 51 பகுதிகளில் பிரதான மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 25477/2017/DO1 நாள் 07-08-2019 வாயிலாக ரூ.27.63 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து மேற்படி பணிக்கு 11-02-2020 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

**1008-ன் தொடர்ச்சி**

அதன்படி மேற்படி பணிக்கு 11-02-2020 அன்று திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** மற்றும் திருவாளர்கள் **Annai Infra Developers Limited, Erode** ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான உறை திறப்பு செய்யப்பட்டு மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் உறை 19-03-2020 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST ) உட்பட | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** | **30,24,05,559.68** | 16.27% அதிகம் | இணைக்கப் பட்டுள்ளது. |
| 2. | திருவாளர்கள் **Annai Infra Developers Limited, Erode** | **30,41,49,274.24** | 16,94% அதிகம் | இணைக்கப் பட்டுள்ளது. |

மேற்படி இரண்டு நிறுவனத்தாரில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 16.27% அதிகமாக இருந்ததால் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1 / 6630 ( IX - II) 2017 நாள் 23-03-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் 24-03-2020 தேதிய விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST ) உட்பட | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** | **28,60,45,155.20** | 9.98% அதிகம் |

விலைக்குறைப்புக்குப் பின் மதிப்பீட்டு விலையை விட 9.98% அதிகமாக இருந்ததால் இரண்டாம் முறையாக மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1/6630 (IX - II ) 2017 நாள் 26-03-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் 27-03-2020 தேதிய இரண்டாவது விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார்செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST ) உட்பட | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** | **27,56,17,249.60** | 5.97% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 5.97% அதிகமாக இருந்ததால் மூன்றாவது முறையாக மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL / E1 / 6630 ( IX - II) 2017 நாள் 30-03-2020 வாயிலாக விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் 31-03-2020 தேதிய மூன்றாவது விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார்செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.(GST ) உட்பட | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** | **27,30,35,940.80** | 4.98% அதிகம் |

**<u>1008-ன் தொடர்ச்சி</u>**

மேலும் கட்டுமானப் பொருள்கள், தொழிலாளர்கள் கூலி மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் சந்தை விலையானது மதிப்பீட்டு விலைகளை விட அதிகமாக இருப்பதனால் மேற்கொண்டு விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் இக்கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்கள்.

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.98% அதிகமாக உள்ள திருவாளர்கள் **KCP Engineers Private Limited, Chennai** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால், விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98 சதவீதம் அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

( TSCL / E1 / 6630 ( IX - 2) 2017 )

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1009)**திருப்பூர் மாநகராட்சி -COVID -19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க 1) நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம் 2) L.R.G. மகளிர் கல்லூரி வளாகம் ஆகிய இரண்டு இடங்களில் போகஸ் விளக்குகள் மற்றும் ஒலி பெருக்கிகள் வாடகை அடிப்படையில் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.34 இலட்சத்திற்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண். 15-ன் கீழ் நிர்வாக அனுமதி 16-04-2020 அன்றுபெறப்பட்டு 16-04-2020 அன்று மாலை 3.30 மணி வரை விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வருமாறு உள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | Unit | Thaai Electrical Works & Sound Service | Siva Electrical Works Sound Service | M.S.Electrical Works |
|---|---|---|---|---|---|
| 1. | Hire Charges for Mick Set Horn-6Nos, Mick-1No, Amplyfire-1 set, 2.5sq.mm.Wire, Including Labour Charges, Transportation etc., complete | 1Day | 3500.00 | 3700.00 | 3800.00 |
| 2. | Hire Charges for Focus Light -1 No, LED Lamp – 100 W-1 No, 2.5 sq.mm Wire, Including Labour Charges, Transportation etc., complete | 1 Day | 350.00 | 370.00 | 390.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். தாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் & சவுண்ட் சர்வீஸ் அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்கியதையும் ஏற்கலாம்.

2.பதிவு செய்யலாம். ( இ.1 / 1209 / 2020/ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1010)**திருப்பூர் மாநகராட்சி -COVID -19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க 1) L.R.G. கல்லூரி 2) நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 3) பழைய பேருந்துநிலையம், 4)தென்னம்பாளையம் வாரச்சந்தைபேட்டை 5) தென்னம்பாளையம் உழவர் சந்தை ஆகிய ஐந்து இடங்களில் புதிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்து கை கழுவுதல் வசதி செய்து கொடுத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண்.15-ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16-04-2020 அன்று பெறப்பட்டு 16-04-2020 அன்று மாலை 3.30 மணி வரை

**1010-ன் தொடர்ச்சி**

விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வரமாறு உள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | Unit | Ramachandra Electrical & Engineering Stores | S.Mani Electricals | Golden Engineering Corporation |
|---|---|---|---|---|---|
| 1. | Supplying and Fixing of HDPE Tank 2000 Litre capacity | 1 No. | 18500.00 | 19000.00 | 18400.00 |
| 2. | Supply and Fixing of 4´Dia RCC Ring | 1 No. | 1900.00 | 1850.00 | 1800.00 |
| 3. | Supply and Fixing of 4" Dia RCC precast Slab 50mm thick | 1 No. | 1300.00 | 1250.00 | 1200.00 |
| 4. | Supply and Fixing of Hand Wash Basin sink of size 600mm x 450mm x 200mm | 1 No. | 1850.00 | 1800.00 | 1750.00 |
| 5. | Supply and Fixing of Waste Not Tap | 1 No. | 800.00 | 800.00 | 750.00 |
| 6. | Supply and Fixing of 1" Hose | 1 No. | 370.00 | 350.00 | 300.00 |
| 7. | Supply and Fixing of MS STAND | 1 No. | 1950.00 | 2000.00 | 1500.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். கோல்டன் இன்ஜினியரிங் கார்ப்பரேசன் அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும், மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்கியதையும் ஏற்கலாம்.

2.பதிவு செய்யலாம். ( இ.1 / 1209 / 2020/ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1011)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதியதாக வரப்பெற்ற நான்கு பாப்காட் ( Bobcart) வாகனங்களை இயக்க இலகுரக வாகன ஒட்டுநர்கள் தேவைப்படுவதாக நான்கு மண்டல சுகாதார அலுவலர்கள் 06-011-2019ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

அதன்படி 20-08-2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் திருவாளர். அமிர்தா எஜிகேசனல் அன்ட் சேரிடபிள் டிரஸ்ட், திருப்பூர் நிறுவனத்தாரின் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் வாகனங்களை இயக்க வெளிச்சந்தை (Outsourcing) முறையில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு 06-11-2019 முதல் 31-12-2019 வரையுள்ள காலங்களுக்கு மேற்படி நிறுவனத்திற்கு நான்கு இலகுரக வாகன ஓட்டுநர்களை பொது சுகாதார நலன் கருதி பணி அமர்த்திக் கொள்ளவும் மற்றும் இதற்கான உத்தேச செலவீனம் ரூ.1.05 லட்சத்திற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பரிவு 101 உட்பிரிவு 2 (பி)ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் பதிவு செய்யலாம். ( எச்.1 / 3192 / 2018)

-------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

-------

**1012)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3, வார்டு எ.ண்.45-ல் உள்ள காமராஜர் சாலை தினசரி மார்க்கெட் பகுதியில் உள்ள ஆர்.சி.சி. கூரை கட்டிடங்கள் 1965-ல் கட்டப்பட்டது. ( கட்டிடம் கட்டி 55 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது). சிமெண்ட் கூரை கட்டிடங்கள் 1975-ல் கட்டப்பட்டது. ( கட்டிடம் கட்டி 45 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது). தென்புறமுள்ள பொது கழிப்பிடம் ஆர்.சி.சி. கூரை கட்டிடம் கட்டி 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஸ்மார்ட் சிட்டி திட்டம் 2018-19ன் கீழ் தினசரி மார்க்கெட் பழைய கட்டிடங்கள் இடித்தகற்றி புதிய பொழிவுடன் தினசரி மார்க்கெட் கட்ட 7-வது சீர்மிகு நகரம் உயர்மட்ட திட்ட ஒப்புதல் குழு பரிந்துரை நாள் 22-11-2018 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், M/s. MSTC Limited, சென்னை என்ற நிறுவனத்தின் கடிதம் MSTC / NB / 2019-20 / 9238 நாள் : 27-12-2019-ல் திருப்பூர் மாநகராட்சியில் உள்ள ( Immovable Properties) கட்டிடங்களை E - Auction மூலம் இடித்தகற்றவும் மற்றும் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ( MOU) ஏற்படுத்தவும் மற்றும் மேற்படி E - Auction மூலம் உறுதி செய்யப்படும் தொகையில் 3% தொகையினை ( மற்ற வரிகள் நீங்கலாக) 18% GST மற்றும் சேவை வரி உட்பட் M/s. MSTC Ltd., சென்னை என்ற நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தினசரி மார்க்கெட்டில் உள்ள பழைய கட்டிடங்களை M/s. MSTC Ltd., சென்னை நிறுவனத்தின் மூலம் E - Auction முறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஏற்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி பணியை உடன் முடித்து பணி முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பழைய கட்டிடங்களை இடித்தகற்றி அப்புறப்படுத்த ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். (TSCL / E1/ 6630 ( III-B) 2017)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

------

**1013)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலத்திலும் வரி மற்றும் வரியில்லா இனங்கள் சொத்துவரி, குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் 22-03-2020 முதல் கொரோனா ( Covid-19) என்னும் கொடிய வைரஸ் நோய் பொது மக்களை தாக்கம் செய்ததால், 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, அமலில் உள்ளது. பொது மக்கள் வரியினங்களை செலுத்துவதற்கு, அரசாணை எண்.141 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-IV) துறை நாள் 23-04-2020-ல் கால அவகாசம் 3மாதங்களுக்கு (30-06-2020 வரை) நீட்டிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம். **( அ.1 / 2344 / 2020 )**

-----

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

------

**1014)** திருப்பூர் மாநகராட்சி உள்ளூர்திட்டக்குழும நிதியிலிருந்து நடை மேம்பாலம் (SKY WALK) அவிநாசி - திருப்பூர் - அவிநாசிபாளையம் தேசிய நெடுஞ்சாலையில் (NH-381) கீழ்கண்ட இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அவிநாசி சாலை புஷ்பா தியேட்டர் சந்திப்பு 12/400 | - | 1எண் |
| 2. | டவுன் ஹால் சந்திப்பு 11/345 | - | 1எண் |
| | மொத்தம் | - | 2எண் |

மேற்காண் இடங்களில் நடைமேம்பாலம் பணி மேற்கொள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறையின் ஒப்புதல் எதிர்நோக்கி இரும்புச் சட்டங்கள் வடிவமைக்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைத்துறையின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி உரிய உரிமக் கட்டணமும் செலுத்த வேண்டியுள்ளது ஆதலால், மதிப்பீட்டில் மேற்படி பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே, மேற்படி இரு இடங்களில் நடை மேம்பாலம் அமைக்க வடிவமைக்கப்பட்ட இரும்பு சட்டங்களின் நீளத்தினை தேசிய நெடுஞ்சாலைத் துறையின் வழிகாட்டுதல் படி அதிகரிக்கவும், தாங்கு தூண்கள் நிறுவ அடித்தளம் அமைக்கவும், மறு வடிவமைப்பு செய்யவும் கூடுதல் செலவினத்திற்கு மேற்காண் இரு இடங்களுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | அவிநாசி சாலை புஷ்பா தியேட்டர் சந்திப்பில் நடை மேம்பாலம் அமைக்க கூடுதல் பணிகளுடன் இரும்புச் சட்டங்கள் மறு வடிமைத்தல் | - | ரூ.19.00 இலட்சம் |
| 2. | டவுன் ஹால் சந்திப்பில் நடை மேம்பாலம் அமைக்க கூடுதல் பணிகளுடன் இரும்புச் சட்டங்கள் மறுவடிவமைத்தல் | - | ரூ.19.00 இலட்சம் |

எனவே, மேற்காண் மதிப்பீட்டுத் தொகை செலவினத்திற்கு அனுமதியும், ஏற்கனவே தயார் செய்யப்பட்ட இரும்புச் சட்டங்களினை கூடுதல் நீளத்துடன் மாற்றியமைத்துக் கொள்ளவும், உரிய மறு வடிவமைப்புடன் நிறுவவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மேற்காண் நடை மேம்பாலம் பணி உத்தேசிக்கப்பட்ட திட்டப் பணியாதலால் உடன் பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் மேற்காண் கூடுதல் மதிப்பீட்டுச் செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்காண் இரு மதிப்பீட்டு செலவினத்தினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( இ.1 / 05192 / 2020)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1015)** திருப்பூர் மாநகராட்சி குடிநீர்த் திட்டப் பிரிவில் இரண்டு குடிநீர்த் திட்டங்கள் மூலம் மாநகருக்கு குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இவ்விரு குடிநீர்த் திட்டங்களில் TWAD Board மற்றும் NTADCL குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக மாநகரில் 115 MLD என்ற அளவில் குடிநீர் பெறப்படுகிறது.

**<u>TWAD Board குடிநீர்த் திட்டம்</u>**

இத்திட்டத்தின் வாயிலாக கீழ்க்கண்ட இடங்களில் மேல்நிலை மற்றும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளில் குடிநீர் பெறப்படுகிறது.

**1015-ன் தொடர்ச்சி**

- 15 வேலம்பாளையம்
- அனுப்பர்பாளையம்
- EB காலனி
- குமார் நகர்
- பாரதியார் வணிக வளாகம்
- ராயபுரம்
- பெரிச்சிபாளையம்
- அங்கேரிபாளையம்
- செட்டிபாளையம்
- பாண்டியன் நகர்
- நெருப்பெரிச்சல்
- பூச்சக்காடு

இத்திட்டத்தின் வாயிலாக 30MLD என ஒப்பந்த அளவு விநியோகிக்கப்பட வேண்டும். ஆனால் இத்திட்டத்தின் மூலம் 18MLD என்ற அளவில் தான் குடிநீர் பெறப்படுகிறது. ஆனால் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினர் (TWAD)25MLD விநியோகிக்கப் படுவதாக கணக்கீடு செய்து குடிநீர் கட்டணப் பட்டியல் தயார் செய்கின்றனர். இத்திட்டத்தில் பொருத்தப்பட்ட நீர்அளவுமானி சீராக இயங்குவதில்லை கண்காணிப்பு செய்ய இயலாத நிலை உள்ளது.

**NTADCL குடிநீர்த் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் ஒப்பந்தப்படி 39 MLD வழங்கப்பட வேண்டும். ஆனால் முதல் குடிநீர்த்திட்டம் புதிய குடிநீர்த்திட்ட மேம்பாட்டுப் பணியில் கைவிடப்பட்டதால் கூடுதலாக தற்போது 97 MLD அளவில் தினசரி குடிநீர் FM - I, FM - II, மற்றும் FM-III ஆகிய மூன்று பிரதான குழாய் பாதை மூலமும் பெறப்பட்டு வருகிறது. பிரதான குழாய் பாதைகளில் FM - I மூலம் குடிநீர் கொணர் குழாய் பாதையில் மாநகரின் பிரதான நகர் பகுதிக்கு வழங்கப்படும் குழாய் பாதையாகும். இக்குழாய் பாதையில் 60 MLD குடிநீர் வழங்கப்படுவதாக மேற்படி குடிநீர்த் திட்டத்தினர் தெரிவித்துள்ளனர். மேற்படி FM-I குழாய் பாதையில் இணைப்பு செய்யப்பட்ட இடங்களின் விபரம் பின்வருமாறு. ( Tapping Point)

1. பூலுவப்பட்டி நீருந்து நிலையம்
2. சினேகா நகர் நீருந்து நிலையம்
3. போயம்பாளையம் நீருந்து நிலையம்
4. பிச்சம்பாளையம் நீருந்து நிலையம்
5. பிஷப் பள்ளி அருகில் WDS
6. பாரதியார் காம்ப்ளக்ஸ் WDS
7. ராயபுரம் WDS
8. பூச்சக்காடு WDS
9. தென்னம்பாளையம் WDS
10. பெரிச்சிபாளையம் WDS - I
11. பெரிச்சிபாளையம் WDS - II
12. வினோபா நகர் WDS
13. NRK புரம் WDS

மேலும் தற்போது கீழ்க்கண்ட மூன்று இடங்களில் AMRUT -I திட்டத்தில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு FM - I பிரதான குழாய் பாதையில் இணைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

14. PN ரோடு மயானம் ( அருகில்) குமரன் பார்க் எதிரில்
15. PN ரோடு மயானம்(அருகில்) காட்டன்மில் சந்திப்பு (கவுண்ட நாயக்கன்பாளையம்)
16. சங்கிலிப் பள்ளம் ஓடை அருகில் ( சந்திராபுரம் OHTs)

**1015-ன் தொடர்ச்சி**

NTADCL குடிநீர்த் திட்டத்தில் FM-I குடிநீர் கொணர் குழாய் பாதையில் இணைப்புச் செய்யப்பட்ட பகுதிகளில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் பெறப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீருந்து நிலையங்கள் வாயிலாக நிரப்பி பகிர்மானத்தில் விநியோகிக்கப்படுகிறது. மேற்காண் இணைப்பு மூலம் பெறப்படும்குடிநீரின் அளவினை குடிநீர் பணியாளர்கள் பகிர்மானத்தில் தேவைக்கேற்ப தன்னிச்சையாக மதகுகளை திறந்து நீரினை பெறப்படுவதால் மற்ற பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட குடிநீர் பெற இயலாத நிலை உள்ளது. இதனால் குடிநீர்த் தேவை மக்கள் தொகை அதிகமுள்ள பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதுடன் குடிநீர் விநியோகிக்கும் கால இடைவெளி அதிகரித்து உள்ளது. இதனால் மாநகரில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் விநியோகிக்கும் கால இடைவெளி வேறுபடுவதால் சட்டமன்ற உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுவதுடன் பொது மக்களிடம் மாநகராட்சி மேல் அவப்பெயர் நிலை உள்ளது. இதனால் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருடன் குடிநீர் பணியாளர் மற்றும் அலுவலர்களுடன் பலமுறை கலந்தாலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

| Sl.No. | Description | Amount Rs. in lakshs |
|---|---|---|
| 1. | Supply delivery Installation Commissioning and testing of Utilizes Flow Sensor equipments and its accessories with GPRS System Pooluvapatti, Thottipalayam, Bishop School, Sneha Nagar | 9.95 |
| 2. | Supply delivery Installation Commissioning and testing of Flow Sensor with A/D Converter Device in NRK Puram, Vinoba Nagar, Perichipalayam, KVR Nagar Booster Station | 9.75 |
| 3. | Supply delivery Installation Commissioning and testing of Sensor with A/D Converter Device Thennampalayam, Boyampalayam, Poochakadu, Rayapuram, Thirumuruganpoondi | 9.40 |
| 4. | Design, Development of Software to monitor and servicing of Device with computer Peripherals | 6.70 |
| | **TOTAL** | **35.80** |

மேலும் மூன்றாவது குடிநீர்த் திட்டத்தில் FM-I ( NTADCL) பிரதான குழாய் பாதையில் 60 MLD குடிநீர் வழங்கப்படுகிறது. இப்பிரதான குழாய் பாதையில் 16 இடங்களில் இணைப்பு செய்யப்பட்டுள்ளதால், அனுமதிக்கப்பட்ட குடிநீர் அளவினைவிட கூடுதலாக பல்வேறு இடங்களில் According to allocated Quantity குடிநீர் பணியாளர்களால் கூடுதலான அளவில் எடுக்கப்படுவதால் பகிர்மானத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் மாநகரில் சீரான முறையில் கால இடைவெளியுடன் அனைத்து பகுதிகளிலும் விநியோகிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. ஆதலால் Water Supply Monitoring Management மூலம் அனைத்து பகுதிகளிலும் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க நீருந்து நிலையங்களில் சமஅளவில் குடிநீர் வழங்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. எனவே, நீருந்து நிலையங்கள் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளில் Flow Sensor, and its accessories, AMR instrument Online Monitoring Device பொருத்தி குடிநீர் விநியோகத்தினை கண்காணித்து குடிநீரினை சிக்கனப்படுத்திடவும் மின்பயனீட்டளவினை சிக்கனப்படுத்திடவும் குடிநீர் அளவினை கண்காணித்து மாநகரில் பகிர்மானத்தில் சீராக குடிநீரினை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். எனவே, மேற்காண் தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்திக் கொள்ளவும் Online Software மூலம்

<u>1015-ன் தொடர்ச்சி</u>

கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்குரிய மதிப்பீட்டு செலவினம் ரூ.35.80 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது. ஆனால் மாநகரில் Equitable uniform water supply distribution to the area is not propely maintained due to excuse drawl of water form tapping by the regulating staffs. மேலும் NTADCL நிறுவனத்தினர் விநியோகிக்கும் குடிநீரினையும் கணக்கீடு செய்ய நீர் அளவுமானிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் இயங்குவதில்லை. இந்நிலையங்களில் பொருத்தப்பட்ட SCADA & RTU ஆகியவை பழுதடைந்துள்ளது.

இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் வழங்கப்படும் குடிநீரின் அளவினை மேற்காண் 12 இடங்களில் அளவீடு செய்ய அளவுமானிகள் பொருத்தப்படவில்லை. எனவே மேற்காண் குடிநீர்த் திட்டத்தில் பெறப்படும் குடிநீரினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அளவுமானியுடன் இணைத்து Cloud மூலம் அளவீடு செய்யத் தேவையான உபகரணங்கள் பொருத்தி கண்காணித்து குடிநீரினை தேவைக்கேற்ப விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

தற்போது மாநகராட்சியில் AMRUT -I மற்றும் II குடிநீர்த் திட்டங்களின் மூலம் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகிறது. இருப்பினும் NTADCL நிறுவனத்துடன் ஒப்பந்தப்படி குடிநீர் பெறப்பட வேண்டும். எனவே, FM -I பிரதானக் குழாயுடன் இணைப்பு செய்யப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியில் வழங்கப்படும் குடிநீரினை அளவீடு செய்யவும், மின்மோட்டார் பம்பு செட்டுகள் இயக்குதலை கண்காணிக்கவும், குடிநீரின் சுத்திகரிப்புத் தன்மையினை அறிந்து கொள்ளவும் மற்றும் மின்பயனிட்டளவும் ஆகிய விபரங்களை ONLINE மூலம் அறிந்து கொள்ளும் வகையில் தொழில்நுட்ப உபகரணங்கள் A/D Convertor Device மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தினால் NTADCL FM - I பிரதானக் குழாய் மற்றும் இரண்டாவது குடிநீர்த் திட்ட பிரதானக் குழாய் பாதையில் வழங்கப்படும் குடிநீரினை அளவீடு செய்யலாம். மேற்காண் தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்டால் மேற்படி நீருந்து மற்றும் நீரேற்று நிலையங்களில் வழங்கப்படும் குடிநீரினை கண்காணித்து மாநகரில் சீரான கால இடைவெளியில் அனைத்து பகுதிகளிலும் குடிநீரினை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். இதனால் சட்டமன்ற உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகளை தவிர்க்கவும் குடிநீரினை சிக்கனமாகவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தன்மையினையும் மின் செலவினத்தின் சிக்கனத்தையும் மற்றும் பம்பு செட்டுகளின் இயக்கத்தினையும் கண்காணித்து சீரான முறையில் தடையின்றி குடிநீரினை பகிர்மானத்தில் மேற்காண் பகுதிகளுக்கு வழங்க இயலும்.

**அலுவலகக் குறிப்பு** :

1. குடிநீர் பணி அத்தியாவசிய அவசர அவசியம் கருதி குடிநீர் பற்றாக்குறையினை தவிர்க்கும் பொருட்டு குடிநீரினை சிக்கனப்படுத்திடவும், மின்சேமிப்பு செய்திடவும் மாநகரின் அனைத்து பகுதிகளிலும் சீரான கால இடைவெளியுடன் குடிநீரினை பகிர்மானத்தில் விநியோகிக்கவும் மேல்நடவடிக்கையாக நவீன தொழில்நுட்பத்துடன் குடிநீர் விநியோகத்தினை மேலாண்மை செய்யும் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் மதிப்பீட்டு செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( இ.1 / 05193 / 2020)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1016)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் ஓராண்டு காலத்திற்கு இயக்கிப் பராமரிப்பு செய்ய 3 பணிகளுக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து 21-04-2020 அன்று மேற்படி 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. இதன்படி 21-04-2020 அன்று அனைத்துப் பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (ஓராண்டிற்கு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 12 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் ஓராண்டு காலத்திற்கு இயக்கிப் பராமரிப்பு செய்தல். | M/s.Sri Vinayaka Control Technologies. கோயம்புத்தூர் | 8,60,400/- |
| | | M/s. Sri Krishna Chemicals. கோயம்புத்தூர் | 8,61,840/- |
| 2. | திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 12 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் ஓராண்டு காலத்திற்கு இயக்கிப் பராமரிப்பு செய்தல். | M/s.Sri Vinayaka Control Technologies. கோயம்புத்தூர் | 8,60,400/- |
| | | M/s. Sri Krishna Chemicals. கோயம்புத்தூர் | 8,61,840/- |
| 3. | திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 11 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் ஓராண்டு காலத்திற்கு இயக்கிப் பராமரிப்பு செய்தல். | M/s.Sri Vinayaka Control Technologies. கோயம்புத்தூர் | 7,88,700/- |
| | | M/s. Sri Krishna Chemicals. கோயம்புத்தூர் | 7,90,220/- |

மேற்படி 3 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் முறையே ஒவ்வொரு பணிக்கும் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள், ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதை பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. பதிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் கடிதம் எண். 253 / இஎல்இசி/08/2, நாள் 01-09-2008 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.258, நாள் 26-08-2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி சட்ட திருத்த விதிகளின்படி (99,100 மற்றும் 101-ன்படி) மற்றும் மாமன்ற தீர்மான எண்.14, நாள் 30-12-2016-ன் படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம். ( இ.1 / 3315 / 2020 )

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.